பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 03 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பாரத ரத்னா விருது பெற்றுள்ள திரு எல் கே அத்வானி, நாட்டின் வளர்ச்சிக்காக 70 ஆண்டுகளுக்கு மேல் பாடுபட்டவர் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பாக கருதி, மக்கள் பிஜேபி-க்கு வாக்களிக்க வேண்டும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. இந்தியா - இலங்கை இடையே செய்துகொள்ளப்பட்ட நட்பு ரீதியிலான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

4. திரிபுராவில் பெண் அலுவலர்கள் மட்டுமே பணிபுரியும் 58 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

*------ இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>**

நாட்டின் வளர்ச்சிக்காக 70 ஆண்டுகளுக்கு மேல் அயராது பாடுபட்டவர் திரு எல் கே அத்வானி என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னாவை இன்று அவரது இல்லத்திற்கு சென்று வழங்கியபின் குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 1927-ஆம் ஆண்டு கராச்சியில் பிறந்த திரு அத்வானி, பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு 1947-ல் இந்திய பகுதிக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கலாச்சார தேசியத்திற்கான தொலைநோக்கு பார்வையுடன் பல ஆண்டுகள் சமூக அரசியல் மாற்றங்களுக்காக உழைத்தவர் திரு அத்வானி என்று அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்திற்கு அவசரச்சட்டம் அச்சுறுத்தலாக இருந்தபோது, அதை எதிர்த்து நின்று கடுமையாக போராடியவர் திரு அத்வானி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிற்நத நாடாளுமன்றவாதியாகவும், உள்துறை அமைச்சராகவும், துணைப்பிரதமராகவும் நாட்டிற்காக அவர் செயலாற்றியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கு அடித்தளமாக விளங்கியவர் திரு எல் கே அதிவானி என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

திரு எல் கே அத்வானிக்கு, குடியரசுத் தலைவர் பாரத ரத்னா விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்ட திரு அத்வானிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாக பாரத ரத்னா விருதை தாம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலை வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பாக கருதி, மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், உலகின் மூன்றாவது பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தும் நோக்கிலும் இந்த தேர்தலில் மக்கள் பிஜேபி-க்கு வாக்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தித்துறையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும், இளைஞர்களுக்கு ஒவ்வொரு துறையிலும் புதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

உலகில் இந்தியா மீதான நம்பகத்தன்மை உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊழலில் இருந்து நாட்டை காக்க பெரிய போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக அயோத்தியில் ராமர் கோவில் கட்டி, பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ராணுவத்தில் ஒரு பதவிக்கு – ஒரு ஓய்வூதியம், முத்தலாக் சட்டம் ரத்து, மகளிருக்கு நாடாளுமன்றத்தில் 33 சதவீத இடஒதுக்கீடு போன்றவை கடந்த பத்தாண்டு ஆட்சியில் நிகழ்த்தப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>

கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்த கருத்துக்கு காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திரு கார்கே, வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், எல்லைப்பிரச்சினை தொடர்பாக பங்களாதேஷுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை போலவே, கச்சத்தீவு விவகாரத்திலும் அண்டை நாடான இலங்கையுடன் நட்பு ரீதியிலான ஒப்பந்தத்தை இந்தியா செய்து கொண்டது என்றும்,

அதன் அடிப்படையிலேயே அப்போது ஆட்சியில் இருந்த திருமதி இந்திராகாந்தி தலைமையிலான அரசு கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில், இப்பிரச்சினையை பிரதமர் எழுப்புவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு முகுல் ரோத்தகி,இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாக உச்சநீதிமன்றத்தில் தெரிவித்ததாகவும் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தமது வலைதள பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>

ஜனநாயகத்தையும், அரசியல் அமைப்புச்சட்டத்தையும் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, **I N D I** கூட்டணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், அரசின் அமைப்புகள் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவதற்காக முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

இக்கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, திருமதி பிரியங்கா காந்தி, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் திரு பகவந்த் மான், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு சம்பை சோரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் திரு சீத்தாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரு டி ராஜா மற்றும் எதிர்க்கட்சி கூட்டணியின் பல தலைவர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>

திரிபுராவில் மக்களவைத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள 793 வாக்குச்சாவடிகளில் பெண் அலுவலர்கள் மட்டுமே பணியாற்றும் 58 வாக்குச்சாவடிகள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணிகள் அனைத்திலும் பெண்கள் மட்டும் பணியமர்த்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் சுமார் 500 மகளிருக்கு அகர்தலாவில் இன்று சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் நாளை முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது, நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அரசியல் கட்சிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல் முதல்முறை வாக்காளர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

<<<<<<<>>>>>

நாட்டின் உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் எட்டு சதவீதத்தை எட்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். மும்பையில் இன்று முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக இருக்கும் என்றும் தெரிவித்தார். பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நிலைப்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலன் அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி எட்டு புள்ளி நான்கு சதவீதம் பதிவாகியிருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை – தில்லி அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது

----------------

அகமதாபாதில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில், குஜராத் அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 162 ரன் எடுத்தது.

163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 19 புள்ளி ஒரு ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 168 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

---------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parvej Khan** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 800 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

**San Luis Open Tennis** போட்டியில் இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha - Rithvik Choudary Bollipalli** இணை பட்டம் வென்றது.

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் **Bellier - Huesler** இணையை வென்றது.

**<<<<<<<END>>>>>**